உ

"தேசிய வாசிப்பு மாதம் ஒக்டோபர் - 2016
சிறப்பிதழ்

# பூங்கதிர்

புத்தகம்
"வாசித்தல் சுவாசித்தல் போல
சுவாசித்தல் நின்றாலும் மரணம்
வாசித்தல் இல்லையென்றாலும்
மரணம்."


பொதுநூலகம் - பூநகரி

இதழ் : 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய வாசிப்பு மாதம் ஒக்டோபர் – 2015 நிகழ்வுகளின் பதிவுகள்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை...

திரு மு.இராஜகோபால்
செயலாளர்,
பூநகரி பிரதேச சபை.

"நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" எனும் ஒளவையார் முதுமொழிக்கிணங்க நாம் எந்த அளவிற்கு நூல்களை வாசிக்கின்றோமோ அந்த அளவிற்கு நமது அறிவு வளர்ச்சி அடையும். அதற்கு முதுகெலும்பாகத் திகழ்வது நூலகமே. நூலகத்தில் நமது அறிவை வளர்க்கக்கூடிய பலதரப்பட்ட விடயங்கள் அடங்கியுள்ளன. சாதாரண பாமர மக்களினதும் அறிவை வளப்படுத்தும் ஓர் இடமாக நூலகம் விளங்குகின்றது. வாழ்வியல் வரலாறு, இலக்கியம், மேற்கோள் நூல்கள், சிறுகதைகள், மனோதத்துவம், வாராந்த, மாதாந்த சஞ்சிகைகள், நாளிதழ்கள் என அனைத்து அம்சங்களையும் ஒரு நூலகம் கொண்டமைந்துள்ளது. நமது மொழி வளத்தைப் பெருக்குவதற்கும் வாசிப்பைச் சரளமாக்குவதற்கும் நூலகம் முக்கிய பங்காற்றுகின்றது. ஆரம்பப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை பயிலும் மாணவர்கள், கல்வியியலாளர்கள் என அனைத்து தரப்பினரும் நூலக வளங்களை எந்த வித தயக்கமுமின்றி பயன்படுத்தி வருகின்றனர்.

நம் நாட்டில் பொது நூலகங்கள், கல்விசார் நூலகங்கள், விசேட நூலகங்கள் என பல வகையான நூலகங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் பொது நூலகங்கள் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை பேணிப் பாதுகாப்பதில் மிகவும் முக்கிய பங்காற்றுகின்றது. பொது நூலகத்தை நூலகம் அமைந் துள்ள சமூகம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நமது அரசாங்கம் வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கப் பல முயற்சிகளை மேற் கொண்டு வருகின்றது. வாசிப்பு மீதான பற்றினை அனைத்து தரப்பினரும் உணர வேண்டும், நூலகம் பற்றிய விழிப்புணர்வு அனைவரிடத்திலும் ஏற்பட வேண்டும் எனும் நோக்கில் "தேசிய வாசிப்பு மாதம்" கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஆண்டுதோறும் ஒக்டோபர் மாதம் முழுவதும் தேசிய வாசிப்பு மாதமாக தேசிய ரீதியில் அங்கீகரிக்கப்பட் டுள்ளது. மேலும் இம்மாதத்தில் அரச அறிவுறுத்தல்களுக்கமைவாக அனைத்து நூலகங் களிலும் வாசிப்பில் ஆசை, ஆர்வத்தை ஏற்படுத்தும் முகமாக பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நூலகர் மற்றும் நூலக குழுக்கள் மூலம் வாசிப்பை மேம்படுத்தும் பல்வேறு நிகழ்வுகளை செயற்படுத்தி பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் எமது பூநகரி பொதுநூலகமும் தேசிய வாசிப்பு மாதம் ஒக்டோபர் 2016 ஐ முன்னிட்டு பல்வேறு செயற்றிட்டங்களை மாணவர்கள் மற்றும் வாசகர் களிடையே நடாத்தியுள்ளது. அவற்றில் ஓர் அங்கமாக தொடர்ச்சியாக நான்காவது ஆண்டு 'பூங்கதிர்; எனும் இச்சஞ்சிகையை வெளியிட்டுள்ளனர். அச்சஞ்சிகையானது சிறந்த பெறுபேற்றை வழங்க எனது உளம் நிறைந்த வாழ்த்துக்களை முதலில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் சுய கல்வியைத் தொடர்ந்து பலப்படுத்திக் கொள்வதன் மூலம் ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையை சகல வழிகளிலும் மேம்படுத்திக் கொள்ள முடியும். அதற்கு மாறாக சுய கல்வியின் மீது பற்று இல்லாத இல்லது அதற்கான முயற்சிகள் கூட எடுக்காதவர்களாகப் பலர் இருக்கின்றார்கள்.

அவர்களின் வாழ்க்கையை எடுத்துக் கொண்டால் பல்வேறு இன்னல்கள் தொடர்ந்து நடைபெற்று வரும் உலகில் ஒரு வித அச்சத்துடனேயே வாழ்க்கை நடாத்த வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அவர்கள் ஒருவித மன அழுத்தத்துடனேயே வாழ்க்கையை கடக் க வேண்டியவர்களாக உள்ளனர். அவ்வாறு உள்ளவர்கள் எதிலும் ஈடுபாடு இல்லாதவர் களாக காலப்போக்கில் மாறி வருகின்றனர். அது ஒரு இயந்திரத்தனமான வாழ்வை அவர்களிடத்தில் ஏற்படுத்தி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே சுய கற்றல் பயிற்சியை தொடர்ந்து கடைப்பிடிப்பதன் மூலம் தனது வாழ்க்கையை உரிய வகையில் அமைத்துக் கொண்டு சமூக மாறுதல்களுக்கான பணிகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்பவர்களாக மாற முடியும்.

நூலகம் என்பது அறிவுத் திருக்கோயில், இங்கு வந்தவர்கள் மாணவர்களாக, கல்வியியலாளர்களாக, அறிஞர்களாக, பேரறிஞர்களாக உயர்கின்றனர். ஒரு நூலகத்தில் 50000 புத்தகங்கள் இருக்கின்றது என்றால் அங்கு 50000 அறிஞர்கள் இருக்கின்றார்கள் என்று பொருள் கொள்ளலாம். நூலகம் என்பது மனிதனின் மிகப் பெரிய சொத்தாகும். மனிதனை மனிதனாக்கும், அறிஞனாக்கும், விஞ்ஞானியாக்கும் திறன் நூலகத்திற்கு மட்டுமேயுண்டு.

ஒரு இனத்தை அழிக்க வேண்டுமாயின் முதலில் அவர்களின் இலக்கியத்தை அழிக்க வேண்டும் என்பார்கள். ஒரு நூலகம் திறக்கப்படும் போது நூறு சிறைச் சாலைகள் மூடப்படுகின்றன என்பது பொனமொழி. மாமனிதர் அப்துல்கலாம் அவர்கள் குடியரசுத் தலைவராக பதவியேற்ற போது நூலகரை வரவழைத்து கௌரவப் படுத்தினார். இது நூலகங்களின் மீதான அவரது ஆர்வத்தின் வெளிப்பாடு. அறிஞர் அண்ணா படிக்கத் தொடங்கிய ஒரு நூலைப் படித்து முடிக்க வேண்டும் என்பதற்காக அறுவைச் சிகிச்சையை ஒரு நாள் தள்ளி வைத்தார். அறிஞர் அண்ணா ஆலயம் செல்வதில்லை. ஆனால் நூலகம் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அதனால் தான் அறிஞராக உயர்ச்சியடைந்தார். மாவீரன் பகத்சிங் தூக்குமேடைக்கு செல்லும் வரை நூல்கள் படித்துக் கொண்டிருந்தார். 10 ஆம் நூற்றாண்டு பாரசீக மன்னன் அப்துல் காசிம் இஸ்மாயில் 170000 நூல்கள் வைத்திருந்தார். அவரது படைத்தளபதிகள் படையெடுத்துச் செல்லும் போது நூல்களைத் தான் அள்ளி வருவார்களாம். அக்பருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆனால் நூல்களைப் படிக்கச் சொல்லி கேட்டு அறிந்து மிகப் பெரிய அறிஞராக உருவானார். நெப்போலியன் சிறையில் இருக்கும் போது நூல்களையே படித்து வந்ததாக கூறப்படுகின்றது. மகாத்மாகாந்திக்கு வாசிக்கும் பழக்கம் நிறைய உண்டு. அதனால் தான் திருக்குறளின் காரணமாக தமிழையும் நேசித்தார். அவரது சத்திய சோதனை நூல் வடிவம் பெற அவரது நூலறிவே காரணமாகும்.

தனிமையையும் கவலையையும் விரட்டுவது நூல்களாகும். இது கணினி யுகம். இணையத்தளங்கள், மின்னணு நூலகங்கள் வந்துவிட்டன. உலகப் புகழ் பெற்ற இணையத் தேடுதளங்களான கூகுள், யாகூ எனப் பல்வேறு தளங்களில் உங்களுக்கு தேவையான அனைத்து தகவல்களையும் பெற்றுக்கொள்ளலாம். இணையம் என்பது தீ போன்றது. தீயை சமைக்கவும் வெளிச்சம் பெறவும் ஆக்க சக்தியாக பயன்படுத்தலாம். தீயை எரிக்கவும் கொளுத்தவும் அழிவு சக்தியாகவும் பயன்படுத்தலாம். இணையத்தை இனிமேல் அறிவு வளர்க்கும் ஆக்க சக்தியாக மட்டுமே பயன்படுத்துவோம். அறிவைச் சிதைக்கும் ஆபாச சக்திக்குப் பயன்படுத்தாமல் இருப்போம். எனவே சாலவும் நன்று எது? என்று கேட்டால் நூலகம் செல்வதே என்பது எனது கருத்து. ஆலயம் செல்வதும் வாழ்க்கைக்கு இன்றியமையாதது. எனினும் மனிதனைப் பண்படுத்தும் நெறிப்படுத்தும் மகிழ்வூட்டும் அறிவுத்திறன் வளர்க்கும் நூலகம் செல்வோம். நமது குழந்தைகளை நூலகம் அழைத்துச் சென்று பழக்குவோம். வாசிப்புப் பழக்கத்தை சுவாசிப்பதைப் போன்று வழக்கப்படுத்துவோம். நமது பண்பாட்டைச் சிதைக்கும் சீரழிக்கும் திரைப்படம் மற்றும் தொல்லைக் காட்சியாகிவிட்ட தொலைக்காட்சியிலிருந்து விடுபட்டு நூலகம் செல்வோம். ஆரோக்கியமான மனித சமுதாயம் படைப்போம். பகுத்தறிவைப் பயன்படுத்துவோம். மனிதநேயம் வளர்ப்போம். மானுடம் காப்போம்.

வாசிப்பு, மற்றும் நூலகத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் வெளிவரும் பூங்கதிர சஞ்சிகை சிறப்பாக மலர ஒத்துழைப்பு நல்கிய அனைத்து உத்தியோகத்தர் களுக்கும் எனது பாராட்டுக்களையும வாழ்த்துக்களையும தெரிவித்துக் கொள்கின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றைச் சுவாசித்தால் உயிர் வாழலாம் வாசிப்பை சுவாசித்தால் மனிதனாக வாழலாம் ...

ச.போல் தர்ஷாந் (Dip in Civ.Eng.:
Dip in Of.Mgt)
வருமானப் பரிசோதகர்,
பிரதேசசபை, பூநகரி.

எழுத்தறிவு கல்வியின் முதல்படி. தொடர்ந்து படிப்பதன் மூலமே படிப்படியாக முன்னேற முடியும். எரிந்து கொண்டிருக்கும் விளக்கே வெளிச்சத்தைக் கொடுக்கும். பிற விளக்குகளை ஏற்றி வைக்கும். மற்றைய உயிரினங்களின் வாழ்க்கையில் தலை முறைகள் மாறினாலும் வாழ்க்கை முறைகள் மாறாமல் தொடங்கிய இடத்திலிருந்தே மீண்டும் மீண்டும் தொடங்குகின்றது. ஆனால் மனிதனின் வாழ்க்கை மட்டும் தான் ஒரு தலைமுறை விட்ட இடத்திலிருந்து அடுத்த தலைமுறை வாழ்க்கையை தொடங்கு கின்றது. மனிதன் தன்னுடைய வாழ்க்கையை வரலாறாக நூல்களில் பதிவு செய்து செல்வதன் காரணமாகத் தான இது சாத்தியமாகின்றது.

வாசிப்பது ஓர் அற்புத அனுபவம். அது புதியதொரு உலகைத் திறந்து காட்டும். பல புதிய அரிய தகவல்களை அள்ளித் தரும். நாடுகளின் எல்லைகளையும் வரலாற்றையும் மாற்றி அமைக்கும் மகாபலம் பொருந்தியது புத்தகங்கள். பல புத்தகங்கள் உலகையே உலுக்கி எடுத்துள்ளன.

வாசிப்பு மனதை ஒருமுகப்படுத்தி, நினைவுத்திறனை அதிகரிக்கின்றத. படிப்பவர் களின் கற்பனையையும் அறிவையும் புத்தகம் வளர்க்கின்றது. காட்சி ஊடகங்களைப் போல் புத்தகத்தில் உள்ளவை ஒரு முறையுடன் மறைந்து விடுவதில்லை. அது காலம் காலமாக புதிய புதிய அர்த்தங்களைத் தந்து கொண்டே இருக்கும்.

வாசிப்புத் திறன் செய்யும் தொழிலில் ஆழ்ந்து கவனம் செலுத்தும் திறனை வளர்க்கும். வாசிப்பதால் கிடைக்கும் அனுபவங்களும் எண்ணங்களும் இதுவரை அறிந்தவற்றின் எல்லைகளை விரிவாக்கி மேலும் சிந்திக்க வைக்கும். புதிய தகவல் களை எளிதில் கிரகிக்க முடியும். தகவல்களை வகைப்படுத்தி தேவையானவற்றை தேர்ந்தெடுத்துக் கொள்ள துணைபுரியும். சுருங்கச் சொன்னால் வாசிப்புத் திறன் ஏனைய திறன்களை வளர்க்க வல்லது. பாடநூல்களைப் படிப்பது பெரும்பாலும் அதிக பெறுபேறு-களைப் பெறுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆனால் பொது நூல்கள் வாழ்க்கை முறை மற்றும் ஒழுக்க நெறிமுறைகள் குறித்த பல அறிஞர்களின் கருத்துக் களை வழங்குகின்றது. ஒருவனது வாழ்வு நல்வாழ்வாக அமைய அடித்தளம் அமைப்பது அவனது நற்குணங்களேயாகும். அந்த நற்குணங்களை தேடித் தருவதில் பெரும்பங்கு வகிப்பது நூல்களே.

நூலகம் என்பது அறிவுச் செல்வத்தின் சேமிப்புக் கிடங்கு ஆகும். கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் இணைத்து வைக்கும் சிந்தனைப் பாலம் நூலகமாகும். எதிர்காலத் தை கணித்துச் சொல்ல உதவும். அறிவார்ந்த ஜோதிடர ஏதோ ஒரு நாட்டில். ஏதோ ஒரு காலத்தில் வாழ்ந்த அறிஞனும் நூல்களின் வாயிலாக நம் நெஞ்சருகே வந்து உரையாடுவார். நம் நெஞ்சத்தை உழுது பண்படுத்துவர். படிப்பில் ஆழ்ந்த படிப்பு, அகன்ற படிப்பு என இரு வகையுண்டு. பொதுத் தேர்வுக்குப் படிப்பதை ஆழ்ந்த படிப்பு என்றும் போட்டித் தேர்வுக்குப் படிப்பதை அகன்ற படிப்பு என்றும் கொள்ளலாம். அதேபோல் சீரிய படிப்பும் உண்டு. பொழுதுபோக்குப் படிப்பும் உண்டு. பள்ளியில் படிக்கும் நூல்களால் மட்டும் மாணவர் பரந்த அறிவைப் பெற்றுவிட முடியாது. நூல் நிலையத் திலுள்ள இலக்கியம். வரலாறு. அறிவியல் முதலான பலதுறை நூல்களை எடுத்துப் படித்து மாணவர் தம் பொது அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். நாவல். சிறுகதை இவற்றை மட்டும் படிக்காமல் சான்றோர் வரலாறு, தன் வரலாறு. அறிவியல் சமூகவியல் முதலான பல்வேறு நூல்களைப் படிக்க வேண்டும். ஒரு மாணவன் நூலகம் சென்று பாடநூல்களோடு பிற நூல்கள். மாத இதழ்கள். நாளிதழ்கள் ஆகியவற்றை கற்று வந்தால் நிச்சயம் அவன் பல்துறை அறிவுடைய சிறந்த மாணவனாக வருவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சி என்பது படிப்படியாக நிகழக்கூடிய ஒரு செயற்பாடாகும். ஒரு பயிர் முறையாகப் பராமரிக்கப்பட்டு வந்தால் மட்டுமே அது நல்ல முறையில் வளர்ச்சியடைந்து நல்ல பலனைக் கொடுக்கும். அதுபோல் மாணவர்களின் வளர்ச்சியும் சீராக அமைந்து உரிய பலன் கிடைக்க நூல்களை படிப்பதை அன்றாடப் பணியாகக் கருத வேண்டும். நாள் தோறும் ஐம்பது பக்கங்களாவது படித்துவிட்டுத்தான் உறங்கச் செல்ல வேண்டும் என்று உறுதி மேற்கொள்ள வேண்டும்.

புத்தகத்தை திறக்கும் போது நல்ல அம்சங்கள் அதனுடைய ஒவ்வொரு பக்கத்திலும் ஊற்றெடுக்கின்றன. நல்ல ஆலோசனை, அருமையான போதனை வாழ்க்கையின் உண்மைகள் என அனைத்தும் நமக்குக் கிடைக்கின்றன. புத்தகங்களைப் படிக்கப் படிக்க உங்களையே அறியாமல் அந்த நூல்களிலிருந்து பெற்ற நல்ல செய்திகளை நண்பர்களிடம் பகிர்ந்து கொள்வீர்கள். அது உங்கள் மீதுள்ள எண்ணத்தையும் மதிப்பையும் உயர்த்தும்.

மருத்துவ ரீதியாகவும் நூல்களைப் படித்தல் மனதை மென்மையாக்கும். இரத்த அழுத்தம் உள்ளவரிடம் ஒரு புத்தகத்தை கொடுத்து படிக்கச் சொன்னால் சிறிது நேரத்தில் இரத்த அழுத்தம் குறைவடைந்திருப்பதை அவதானிக்க முடியும் என்கிறது மருத்துவ அறிக்கை. எனினும் புத்தகங்களை ஒரு நல்ல ஆலோசகராக வைத்துக் கொள்ள வேண்டுமே அன்றி எஜமானாகக் கொள்ளக் கூடாது. நூலகங்களைப் பேணிப் பாதுகாப்பது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும். நூலக புத்தகங்களில் குறிப்புகள் எழுதுவதோ தாள்களை மடிப்பதோ கிழிப்பதோ எச்சில் தொட்டு புரட்டுவதோ கூடாது. ஒரு மலரைக் கையாள்வது போல் மென்மையாகக் கையாள வேண்டும். மனிதனுக்கு மூளை இயல்பாகவே வளரும். ஆனால் அறிவு வளர வேண்டும் எனின் வாசிப்பும் அவசியம். காவியங்கள் ஒருவனை உற்சாகமுள்ளவனாக்குகின்றன. கணக்குகள் நுண்மை உடையவனாக்குகின்றன. நீதி நூல்கள் கண்டிப்பானவனாக்குகின்றன. தர்க்க நூல்கள் வாதிடக் கூடியவனாக்குகின்றன.

பகுத்தறிவுக்கு விருந்தளிக்கும் இடம் நூலகம். நூல்களைக் கற்றுத் தெளிவுறும் போது மனிதன் மூடப்பழக்க வழக்கங்களை விட்டொழித்து சுயமரியாதையாக வாழ முன் வருகின்றான். நூலகங்கள் தெய்வீக ஆலயங்களாகத் திகழ்கின்றன.

புத்தகம் அது ஒரு பொய்கை. மனம் அதில் நீராடித் தூய்மை அடைகின்றது. அது ஒரு தேன்கூடு, ஆயிரம் ஆயிரம் பூக்களின் தேன் அதில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. அது ஒரு உயிர். அதில் முன்னோர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். புத்தகத்தை திறப்பவன் அறிவுச் சுரங்கத்தின் வாசலைத் திறக்கின்றான். புத்தகத்தின் பக்கங்கள் வெறும் காகிதங்கள் அல்ல. நாம் அறியாத உலகிற்கு நம்மை அழைத்துச் செல்லும் அதிசயச் சிறகுகள்.

புத்தகத்திற்கு ஏற்புடைய செந்தமிழ் சொல் நூல் என்பதாகும். திருவள்ளுவர் நவில் தோறும் நூல் நயம் போலும் - குறள் 783, நிரம்பிய நூலின்றி கொட்டிக் கொளல் குறள் 401, நுண்ணிய நூல் பல கற்பினும் - குறள் 373, நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை குறள் 322 என்று படித்தறியும் நூல்கள் அடங்கிய இடத்தை அதாவது நூல் அகத்தை அவற்றின் பயனை மாட்சிமையை, அழகுற எடுத்துரைக்கின்றார். மனிதனின் மானத்தை மறைக்க ஆடை வழங்குவது நூல். அவனை சமுதாயத்தில் மானத்தைக் காத்து வாழ்ந்திட நெறிப்படுத்துவது நீதிநூல்கள். தன்னிலையில் தாழாமையும் தாழ்ந்த பின் வாழாமையும் மானம் எனப்படும். எப்படியும் வாழலாம் என்பது வாழ்க்கையன்று. இப்படித்தான் வாழ வேண்டும் என்பதே வாழ்க்கை. ஆத்தகைய ஒழுக்க நெறிகளை வழங்குவது நூல்கள். இந்த உலகத்தை புரிந்து கொள்ள மனிதனுக்கு உள்ள எளிமையான சாதனம் புத்தகங்கள். விலையை வைத்து தரத்தை மதிப்பிட முடியாத பொருள் புத்தமாகும். அதன் விலையிலோ பக்கங்களின் எண்ணிக்கையிலோ அட்டையின் தரத்திலோ இல்லை அதன் தரம். மாறாக படிப்போரது மனதில் அது ஏற்படுத்தும் தாக்கத்திலுள்ளது. அத்தகைய தாக்கத்தைக் கொண்டே புத்தகம் வாசிக்கப்படுகின்றது, பரவலாக்கப்படுகின்றது. கற்க வேண்டிய நூல்களை கசடறக் கற்று கற்ற நூலின் பொருளறிந்து அதன்படி வாழ்வதே சிறந்த வாழ்வு.

ஏராளமான புத்தகங்கள் உங்கள் வாசிப்பிற்காக காத்துக் கிடக்கின்றன. மேன்மை மிக்க சமுதாயத்தை உருவாக்க இன்றே இப்பொழுதே நீங்கள் படிக்கத் தொடங்குங்கள். உங்களைச் சேர்ந்தவர்களைப் படிக்கச் சொல்லுங்கள். காற்றைச் சுவாசித்தால் உயிர் வாழலாம் வாசிப்பை சுவாசித்தால் மனிதனாக வாழலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dengue Fever...

Dr G.Mathiyarasi,
Ayurvedic Medical Officer
Poonakary.

Dengue fever is a painful debilitating mosquito – borne disease caused by anyone of four closely related dengue viruses. These viruses are related to the viruses that cause.

West Nile infection & yellow fever.

Dengue fever is transmitted by the bite of an Aedes mosquito infected with a dengue virus.

The mosquito becomes infected when it bites a person with dengue virus in their blood. if can't be spread directly from one person to another person.


Incubation period – 3-15days

Symptoms of Dengue Fever

1. Sudden, high fever
2. Severe headaches
3. Pain behind the eyes.
4. Severe joint & Muscle pain
5. Fatique
6. Nausea
7. Vomiting
8. Skin rash, Which appears two to five days after the onset of fever.
9. Mild bleeding.

Complications

1. Humor rages under skin or mucous membrane.
2. Otitis media, bronchopneumonia, pneumonia
3. Herpes labials.
4. Jaundice in rare cases.
5. Iritis – Inflammation of eye
6. Orchitis – Inflammation of testis
7. Oophoritis – Inflammation of ovary
8. Depression
9. Shock and Collapse



On Examination (Dengue)

1. Rash – A prodromal rash consisting of erythema.
2. Generalized Lymphadenopathy – Particularly in the cervical region is Common.
3. Pulse shows relative bradycardia and dicrotic character hypertension may be notes.
4. Delirium, Insomnia, Depression
5. Spleen may be rarely palpable.
6. Petechial rash



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Investigation

1. Leucopenia with toxic granulation of polymorphs is constant factures.
2. Urine Contain Albumin
3. Complement fixation test may be positive
4. Virus may be recovered in acute phase of the disease from blood.

Prevention (Dengue Fever)

Awareness-

Awareness is the first step in prevention. people should make sure they are aware of whether there is a risk of dengue infection and be ready to protect themselves if they are travelling to a region where infection is common.

Vector Control

Aedes egypti mosquitoes breed near the water and lay their eggs in the walls of water containers, so these insects are common near water cisterns, unsealed septic tanks, Decorative fountains, discarded tyres and bottles or boats and other vehicles that may collect water while stationary.

Preventation of mosquito bites.

A single bite from the aedes aegypti mosquito is often enough to transmit the dengue infection and adequate protection aganist mosquito bites is important. simple precautionary measures such as wearning clothes that cover the whole body, sleeping under a mosquito net at night and using an insect repellent can help to prevent bites.

நல்ல நண்பர்களைத் தேர்வு செய்வதிலும் கவனமாக இருப்பது போலவே நல்ல புத்தகங்களைத் தேர்வு செய்வதிலும் நாம் மிகுந்த கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் வாழ்க்கையில் பயனுள்ள எந்த நூல்கள் உதவும் ..?

உங்களுக்கு பிடித்த துறையில் சிகரங்களைத் தொட
எந்த நூல்களின் துணையை நாட வேண்டும்?

உங்கள் சிந்தனையைச் செதுக்க எந்த நூல்கள் உதவும்?

என்பது போன்ற கேள்விகளுடன் தேடினால்
மிகச் சிறந்த அறிவுப் புதையல்கள் உங்கள் கையில் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரிப் பிரதேச வேளாண்மைச் சடங்குகள்...

செல்வி சு.பிரதீபா
முகாமைத்துவ உதவியாளர்,
பூநகரி பிரதேச சபை.

கிளிநொச்சி மாவட்டத்தின் வட பகுதியில் உள்ள பூநகரிப் பிரதேசம் பழமை வாய்ந்த பிரதேசமாகும். பூநகரிப்பிரதேசத்தில் கிடைக்கப்பெற்ற தொல்பொருட் சான்றாதாரங்கள் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளிற்கு முன்னரே அங்கு மக்கள் வாழ்ந்தமையை உறுதிப்படுத்துகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் நிலப்பரப்பில் பரந்த பிரதேசமாக விளங்கும் பூநகரிப் பிரதேசம் முப்பதிற்கு மேற்பட்ட கிராமங்களை உள்ளடக்கியுள்ளது. பரந்தளவிலான நிலப்பகுதியை உள்ளடக்கி இருப்பதாலும் நாகரிகம் அடைந்த பிரதேசங்களிற்கு தூரத்தே தனித்தமைந்து இருப்பதனாலும் பண்டைய காலம் முதல் இன்று வரை பண்பாட்டு அம்சங்கள் பேணப்படுவதற்கு வாய்ப்பு கிட்டுகிறது. அந்தவகையில் பூநகரிப் பிரதேசம் சடங்குசார் மரபுகளை அதிகம் பின்பற்றும் இடமாக காணப்படுகிறது.

நெல்லை அடிப்படையாகக் கொண்ட வேளாண்மையை தமது முதன்மை வாழ்வாதாரமாக கொண்ட பூநகரிப் பிரதேச மக்கள் வேளாண்மையுடன் இணைந்த வகையில் பல்வேறு சடங்குகளைக் காலம் காலமாக பின்பற்றி வருகின்றனர். அந்த வகையில் வித்துநாள் அபிஷேகம், ஏர்பூட்டும் வைபவம், மழை அபிஷேகம், பயிர்ப் பொங்கல், காய்ச்சல் பொங்கல், நாகர் பொங்கல், புதிர் பொங்கல், புதிர்எடுத்தல், புதிர் உண்ணல், பொலிச் சடங்கு, வேள்விச் சடங்குகள் (முத்து அரிசி தண்டல் சடங்கு) போன்ற சடங்குகளை குறிப்பிடலாம்

வேளாண்மை மனித வாழ்விற்கு அடிப்படையாகவும் உயிர் தொழிலாகவும் இயங்கி வருகிறது. பூநகரிப்பிரதேச மக்கள் தத்தமக்கென தனியானதோர் தொழில் முறைகளைப் பெற்றிருந்தபோதும் சிறப்பாக இம்மக்கள் யாவரும் விவசாயத்தை வெறுப்பின்றி மேற்கொண்டனர். சமூக ஏற்றத்தாழ்வுகள் இப்பிரதேசங்களில் பெரிதும் பாராட்டப்படாதது போன்றே சமுதாயத்தில் எல்லா மக்களும் நிலத்தினை உடைமைகளாக பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

பூநகரிப்பிரதேசம் வடகீழ்பருவக்காற்றினால் மழையைப் பெறுகிறது. ஆனாலும் மேற்காவுகை மழை மூலம் அவ்வப்போது மழைவீழ்ச்சியை பெற்றுக்கொள்கிறது. வடகீழ் பருவப்பெயர்ச்சிக்காற்று ஆரம்பிப்பதற்கு முன்பாக ஆடி மாதத்தில் ஒரு சிறிய மழை வீழ்ச்சியினை பெற்றுக்கொள்கிறது. "ஆடிப்புழுதி தேடி உழு" என்பது விவசாயிகளின் மரபு. இதற்கேற்ப விவசாயிகள் ஆடிமாதத்தில் உழ ஆரம்பித்து விடுவார்கள். விவசாயிகளின் நடவடிக்கைகள் காலபோகம் (பெரும்போகம்),சிறுபோகம் என்ற இரண்டின் அடிப்படையில் நிகழ்கிறது. பூநகரிப்பிரதேசத்தில் பெருமளவு பெரும் போகமே நிகழ்கிறது. இதனை காலபோகம் என்றும் கூறுவர். தியாகம் எனும் இடத்தில் மட்டும் சிறுபோகம் மேற்கொள்ளப்படுகிறது. குறிப்பாக, காலபோகம் (பெரும்போகம்) வானம் பார்த்த வெள்ளாமை என்ற மரபு வழிக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்வது இயல்பு. முற்று முழுதாக மழையை நம்பியே நெல் வேளாண்மையில் ஈடுபடுவதை அவதானிக்கமுடிகிறது.

முதலாவதாக நல்ல எருதுகள் பூட்டிய ஏர் கொண்டு நன்கு உழுது பண்படுத்தப்படும். தற்காலத்தில் உழவு இயந்திரம் மூலம் பண்படுத்தப்படுகிறது. பண்படுத்திய பின்னர் வயல் வரம்புகள் கட்டப்படுகிறது. இந்நடவடிக்கை வயலில் நீர் நிற்கும் தன்மையை அதிகப்படுத்த மேற்கொள்ளப்படுகிறது. இதனால் களைகளும் மட்டுப்படுத்தப்படுகிறது. பயிர்ச்செய்கைக்காக மழையை எதிர்நோக்கியுள்ள காரணத்தால் அதற்கேற்ப உழுது பண்படுத்தப்பட்டு நிலம் தயார்செய்யப்படுகிறது. இவ்வாறு உழுதல் ஆடி, ஆவணி மாதங்களில் இடம் பெறுகிறது. பயிர்களின் வளர்ச்சிக்காக விதைப்பதற்கு முன்னர் வயல் களிற்கு சேதனப்பசளை இடுதல் முக்கிய செயலாக காணப்படுகிறது. பூநகரிப்பிரதேசத்தில் கால்நடைகள் (மாடுகள்) அதிகமாக வளர்க்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றின் கழிவுப்பொருளாகிய சாணம் சேமித்து வைக்கப்பட்டு வயல்களிற்கு இடப்படுகிறது. இப்பசளை தெருவின் ஒதுக்குப்புறங்களிலும்,வெறும்காணிகளிலும்,வயல் மூலைகளிலும் சேமித்து வைக்கப்படுகிறது. வயலை பண்படுத்திய பின்னர் எருவினை வயலுக்கு இட்டு மீண்டும் உழுவார்கள். இதனை "மறு உழவு" என்று கூறுவர். எருவுடன் சேர்த்து உக்கலடையும் பொருட்களும் (குப்பை கூழங்கள்) பசளையாக இடுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

மழை பெய்ததும் விவசாயிகள் விதைநெல் அடுக்குகளை (பொருட்களை) ஆயத்தம் செய்வார்கள். கடகம், விதைப்பெட்டி, மாடு, ஏர் முதலான அடுக்குகளுடன் உழவுக்காரர் களுக்கும் சொல்லி வைப்பர். வயல் விதைப்புக்காக தேர்வுசெய்யபட்டு வைத்திருந்த விதைகளையே விதைப்பர். விதைப்பதற்கு தெரிவுசெய்யப்படும் விதைகள் விதைப்பதற்கு முன் நீரினுள் இடப்பட்டு முளைவீதம் பார்ப்பர். அதன் பிறகு விதைப்பர். வயல்களின் தன் மைக்கேற்ப விதை வகைகளைத் தெரிவு செய்வர். நெல்லை தெரிவு செய்யும் போது இரண்டரை மாதம் முதல் ஐந்து மாதங்கள் வரை விளையக்கூடிய நெல்வகைகளையும் கூடிய பயனைத்தரவல்ல நெல் இனங்களையும், குறுகிய காலங்களில் அறுவடை செய்யக்கூடிய நெல்வகைகளையும் தெரிவு செய்வர். அதாவது பள்ளமான அதிக நீர் நிற் கும் வயல்களிற்கு நீண்டகாலம் நிமிர்ந்து வளரக்கூடிய நெல் இனங்களையும், குறைந்த நீர் நிற்கும் வயல்களிற்கு காலம் குறைந்த நெல் வகைகளையும் தெரிவுசெய்வர். நீரத் தேவையை பூர்த்தி செய்வதற்காகவே இவ்வுத்தி கையாளப்படுகிறது. அத்துடன் நெல் இனங்களைத் தெரிவு செய்யும் போது நோய்த்தொற்றுநிலைமை அறிந்தும் தெரிவு செய்யப்படுகிறது. புதியவகை நெல் இனங்கள் நோய்த்தொற்று அதிகமாக காணப் படுகிறது. இவ்வகை நெல் இனங்கள் காற்றோட்டம் உள்ள பகுதிகளில் விதைக்கப்படும் மொட்டைக்கறுப்பன், பச்சைப்பெருமாள் ஆட்டக்காரி மற்றும் ஒருசில சம்பா போன்ற நெல் இனங்களை விதைப்பதற்கு தேர்ந்தெடுப்பார்கள். பாரம்பரிய நெல் இனங்களான மொட்டைக்கறுப்பன், சின்னக்கறுப்பன், பச்சைப்பெருமாள், செம்பவளை எத்தகைய சூழலையும் தாங்கி வளரக்கூடிய நெல்லினங்களாக காணப்படுகின்றன. இவ்வகை நெல் இனங்கள் நோய்த்தொற்று குறைவாகவும், உவர்ப்பிரதேசங்களைத் தாங்கி வளரக் கூடியவையாகவும், அதிக போசனைச்சத்தினை கொண்டவையாகவும் காணப் படுகின்றன. இவ்வகை நெல்லினங்களின் அரிசிகள் உலகளாவிய ரீதியில் பிரபல்யம் பெற்றவையாக காணப்படுகின்றன. இத்தன்மை பிரதேசத்தின் தனித்துவத்தை காட்டி நிற்கிறது.ஊர்ப் பொதுக்கோயிலாக அமைந்து காணப்படுகிறது. இவ் ஆலயங்களில் வேளாண்மையுடன் தொடர்புடைய சடங்குகள் (பொலிச்சடங்கு களத்தில் நிகழும்) வருடா வருடம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றதை அவதானிக்கலாம். இச்சடங்குகள் எல்லாக் கோயிலிலும் ஒரே நாளில் நடைபெறுவதில்லை அவரவர் தங்கள் பொருத்தமான சுப நாட்களைத் தெரிவு செய்து சடங்குகளை நடத்துவார்கள். இவை மக்களின் அன்றாட வாழ்வியலுடன் கலந்து காணப்படுகிறது.

### வித்து நாள் கொத்தும் சடங்கு

கமக்காரர்கள் தமது வேளாண்மைச்சடங்குகளிலே முளைப்புச் சடங்கினையும் முக்கியமானதாக கருதுகின்றார்கள். பருவமழை பெய்து வயல் பண்படுத்தப்பட்டு ஒரு நல்ல நாளில் வித்துநாள் கொத்தும் சடங்கு இடப்பெறும். இது மழை பெய்தாலும் பெய்யா விட்டாலும் இடம்பெறும். விதைப்பு செவ்வாய் தவிந்த ஏனைய நாட்களில் உள்ள சுபதினத்தில் ஆரம்பிப்பார்கள். "செவ்வாயில் வித்தும் புதனில் அருவியும் ஒவ்வாதன செயல்" என்ற வாய்மொழி இம்மக்கள் மத்தியில் நிலவி வருகின்றது. செவ்வாய்கிழமை விதைப்புக்கு உகந்த நாளல்ல என்பது இவர்களின் நம்பிக்கை. பஞ்சாங்கத்திலும் வித்துநாளுக்குரிய நாள் குறிப்பிடப்பட்டிருக்கும். அத்தினங்களிலும் இச்சடங்கினை மேற்கொள்வார்கள். கிராமமக்கள் விதைப்பு தொடங்குவதற்கு முன் வித்துநாள் அபிஷேகம் ஆலயங்களில் செய்து கொள்வார்கள். ஆலயத்தில் இடம்பெறும் அபிஷேகம் கும்பத்தில் இறைவனை எழுந்தருளச் செய்து அவர் முன்னிலையில் வித்துநாள் கருமத் தை முடிப்பார்கள். ஆலயத்திற்குச் சொந்தமான வயல்களில் பெரியவர் ஒருவர் விதையை விதைத்து ஆரம்பிப்பார். அங்கிருந்து விதை நெல்லை எடுத்துச் சென்று தங் களின் காணிகளில் குடும்பமாக இறைவனை வேண்டி நெல் விதைப்பர். அதாவது, ஆலயங்களில் வித்துநாள் கொத்தும் சடங்கு முடிவடைந்தவுடன் தங்கள் வயல்களின் ஒரு மூலையில் வைத்து கொத்தி நெல்லைத்தூவி விதைப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பூரம் கொழுத்தி தேங்காய் உடைத்த பின்னரே விதைப்பர். உடைந்த தேங்காய் பாதி கவிழாத வண்ணம் கொண்டு வந்து சாமிக்கட்டில் வைப்பர். இச்சடங்கு நல்ல நாள் நல்ல நேரம் பார்த்து மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.பூநகரிப் பிரதேசத்தை பொறுத்தவரை பொது ஆலயங்களில் வித்துநாள் கொத்திய பின்னரே கமக்காரன் தனக்குரிய வயலுக்கு வித்துநாள் கொத்துவான். வித்துநாள் கொத்தும் ஆலயங்களாக பூநகரி செல்லையாதீவு அம்மன் கோயில், கறுக்காய்த்தீவு முருகன் கோயில் போன்றன காணப்படுகின்றன.

பூநகரி செல்லையாதீவு அம்மன் ஆலயத்தில் விவசாயிகள் தாம் நெல் விதைப்பதற்கு முன்னர் அம்மனுக்கு பூசை வழிபாடு செய்து அம்மனை ஊர்வலமாக கொண்டு சென்று ஆலயக் காணியில் அம்மனின் கைகளால் விதைத்த பின்னர்தான் பூசகரிடம் விதைநெல் வாங்கி விதைப்பது வழக்கமாக இருந்து வருகின்றது. இவ்வழிபாட்டுக்கான முறைகள் கொன்றை மரத்தடியில் இருந்து கிழவி அன்று சொன்னதாக பரம்பரை பரம்பரையாக கூறப்பட்டு செய்து வருவதாக இவ் ஆலய வரலாறு கூறுகிறது.

### மழை அபிஷேகச் சடங்கு

பூநகரிப்பிரதேச நெல்வேளாண்மை முற்று முழுதாக மழையை நம்பியே மேற்கொள்ளப்படுகிறது. மழை பெய்யாத பொழுதும், மழை அதிகரித்து வெள்ளம் ஏற்பட்டாலும் இச்சடங்கு இடம்பெறும். விதைப்பு முடிவடைந்து இரண்டு அல்லது மூன்று வாரங்களின் பின் மழை வேண்டி அபிஷேகம் நிகழ்த்துவார்கள். பெரும்பாலும் பூநகரிப் பிரதேச ஆலயங்களில் இச்சடங்குகள் நடைபெறும் போது மழை பெய்கின்ற சந்தர்ப்பங்கள் காணப்படுகிறது. ஒன்று அல்லது மூன்று நாட்களுக்குள் மழை பெய்துவிடும். மழை அபிடேகம் பயிர் முளைத்தாலும் முளைக்காவிட்டாலும் இடம்பெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதாவது தங்களுக்கு தேவையான பருவமழை பெய்ய வேண்டி இறைவனிடம் வழிபடுவார்கள். பூநகரிப் பிரதேச ஆலயங்களில் வழமையான அபிசேகம் போன்று நவகும்பங்கள் வைத்து பால், தயிர், இளநீர், மஞ்சள்மா, சம்பப்பூடு, பட்டு, பொட்டு போன்ற பொருட்களால் அபிடேகம் இடம்பெறும். இவ் அபிசேகம் செய்வதற்குரிய செலவிற்கான பணத்தினை ஊர் மக்களிடம் இருந்து சேகரிப்பார்கள். அடியார்கள் (பெரும்பாலும் கோயில் நிர்வாகிகள்) மழை அபிடேகம் செய்யப்போகிறோம் என்று தெரிவித்து வீடு வீடாகச்சென்று பணத்தினை சேகரிப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பூநகரிப் பிரதேசத்தில் கிராமங்களுக்கு கிராமம் தத்தம் ஆலயங்களில் மழை அபிடேகம் செய்வார்கள். ஆனால், செல்லையாதீவு அம்மன் ஆலயத்தில் அனைத்து பூநகரிப் பிரதேச மக்களும் ஒன்று கூடி (பல கிராம மக்கள் ஒன்று கூடி ) மழைஅபிடேகம் செய்வதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பூநகரிப்பிரதேசத்தில் மழை அபிடேகம் சிறுதெய்வ பெருந்தெய்வ ஆலயங்களின் இணைந்த நிகழ்வாக காணப்படுகிறது. பூநகரி கறுக்காய்த்தீவு கிராமத்தில் இதனை அவதானிக்கலாம். கறுக்காய்த்தீவு முருகன் ஆலயமும் நாட்டுப்புற ஊர்க்காவல் தெய்வ பெரும்படை கோயிலும் இணைந்த வகையில் மழை அபிசேகச்சடங்கு இடம்பெறுகிறது.

கறுக்காய்த்தீவு முருகன் ஆலயத்தில் மழை அபிசேகத்திற்குரிய நாள் குறிக்கப்பட்டு அபிசேகங்கள் ஆரம்பமாகும். அதே வேளையில் ஊரின் எல்லை புறத்தில் இருந்து காவல் காக்கும் பெரும்படை கோவிலிலும் பொங்கல் இடம்பெற்று பூசை இடம்பெறும். முருகன் ஆலயத்தில் மழைஅபிசேகத்திற்குரிய அபிசேகங்கள் அனைத்து தெய்வங்களுக்கும் இடம்பெற்று சண்டேஸ்வரர் பூசை நிகழ்த்தாமல் பெரும்படை கோவிலில் பூசாரி வரும்வரை காத்திருப்பர். பெரும்படை கோவிலில் பூசாரி பானையில் வெண் பொங்கல் பொங்கி பெரும்படை தெய்வத்திற்கு படைத்து பூசை நிகழ்வினை முடித்து விட்டு முருகன் ஆலயத்திற்கு வருகை தருவார். பெரும்படை கோவிலில் பூசாரி வந்து தமக்கு என்று முருகன் ஆலயத்தில் வைத்திருந்த பூசைப்பொருட்களை எடுத்து ஆலயத்தின் வெளியில் படையல் மேற்கொண்டு பூசை நிகழ்த்துவார். படையல் பிள்ளையார், முருகன், பெரும்படை ஆகிய தெய்வங்களுக்கு மூன்று பிரிவில் இடம்பெறும். பூசை முடிந்து மூன்று தேங்காய் உடைத்து தெய்வமாடும் (கலையாடல்) நிகழ்வும் இடம்பெறும்.

ஆகமமுறையில் அமைந்த முருகன் ஆலயத்தில் பெரும்படை கோவில் பூசகரே தெய்வமாடுவார். தெய்வமாடும் போது வருட வேளாண்மையின் பலாபலன்களை முன் கூட்டியே தெரிவிப்பார். பெரிதும் அவர் சொல்வது போன்றே இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் மழைஅபிடேகம் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் போதே மழைபெய்த சந்தர்ப்பங்கள் உண்டு.

மழை அபிடேகம் பற்றிய நேர்காணலில் கூறப்பட்ட நிகழ்வு ஒன்று இங்கு குறிப்பிடத் தக்கது. "அதாவது தெய்வமாடும் போது மழை பெய்யவில்லை. உடனே அடியவரில் ஒருவர் எங்களுக்கு அவமானம் நிகழ்ந்து விட்டது. ஏளனத்திற்கு உள்ளாகிவிட்டோம் என்று தெரிவிக்க தெய்வமாடுபவர் இன்றைக்கு காட்டவா என்று தெரிவித்தார். அன்று இரவு முழுவதும் மழை பெய்து வெள்ளமாக பாயந்தது என்று தெரிவித்தார்.

கறுக்காய்த்தீவு முருகன் ஆலயமும் நாட்டுப்புற ஊர்க்காவல் தெய்வ பெரும்படை கோயிலும் இணைந்த வகையில் மழை அபிசேகச்சடங்கு இடம்பெறுகிறது. அதாவது கறுக்காய்த்தீவு முருகன் ஆலயத்தில் முருகனுக்கு அடுத்தபடியாக பெரும்படைத்தெய்வம் சிலம்பு (இரண்டு பாதி சேர்ந்து பொருத்தியதாக உள்ளே மணிகளைக்கொண்டு காணப்படுகிறது) வடிவில் வைத்து வழிபடப்படுகிறது. மகாமண்டபத்தின் வலது பக்கத்தில் முதலாவதாக வைக்கப்படுகின்றது.

பூநகரிப்பிரதேசத்தில் மழை அபிடேக நிகழ்வில் பெரும்பாலும் ஆண்கள் மட்டுமே பங்குவற்றுவது குறிப்பித்தக்கது. பெண்கள் கலந்து கொள்வதில்லை. வெளியூர்களில் இருக்கும் கமக்காரர்கள் கூட கிராமத்திற்கு வந்து மழை அபிசேக நிகழ்வில் பங்குபற்றுவது இங்கு குறிப்பிடத்தக்கது

இயற்கை பகுதிகளுக்கு புனிதத்துவத்தை அளித்து அவற்றை தெய்வமாக மதித்து வணங்கிய வழிபாட்டு முறையாகிய வேளாண்மைச் சடங்குகள் சமூக இயக்கத்தில் முக்கியத்துவம் பெற்றவையாக காணப்படுகின்றன. அந்த வகையில், நம்பிக்கைகள், கூட்டுணர்வு, சாதிமுறைமை, குடும்ப அமைப்பு,கிராமிய, பெருதெய்வ இணைந்த வழிபாடு,பூமியினை வழிபடுதல்,பால்நிலை சமத்துவம்,உணவுப் பழக்கவழக்கங்கள் போன்ற பல சமூக பண்பாட்டு விடயங்களை தெளிவுபடுத்துகிறதை அவதானிக்க முடிகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசிப்பை நேசிப்போம்...

திருமதி ச.பாலரதி
நூலக உதவியாளர்
பூநகரி பொதுநூலகம்.

வாசிப்பை நேசிப்போம்.
வீட்டிற்கு வெளிச்சம்
சாளரத்தின் ஊடே
அறிவிற்கு வெளிச்சம்
வாசிக்கும் நூலே!!!

வாசிக்காமல் யார்க்கும்
வளர்வதில்லை அறிவு
இதனை நேசிக்காமல் போனால்
வளர்ச்சிக்கே முறிவு!!!

பொது அறிவு பெற்றிடவே
எப்பொழுதும் நீ வாசி
அறிவுள்ள புத்தகங்கள்
அனைத்தையுமே நேசி!!!

அடிமைகளின் சூரியனாம்
ஆபிரகாம் லிங்கனுமே
அமெரிக்க குடியரசு தலைவனென்று
ஆக்கி உயர்த்தியதும் புத்தகமே!!!

மாணவப் பருவத்திலே
பாடப் புத்தகங்களின் வாசிப்பு
சதத்தினையும் தொட வைக்கும்
வாசிப்பு சாதிக்க வழி வகுக்கும்!!!

ஊருலகம் யாவும் யாவும்
சுற்றி அறிய காலம் கொள்ளும்
புத்தகங்கள் அனைத்தும் விளக்கும்
கற்றறிய குறுகிய காலம் போதும்


இருந்த இடத்தில் எல்லாம் அறிய
கையடக்க நூலே போதும்
கற்றறியும் வழக்கமிருந்தால்
சுடர்விடும் உன் அறிவெப்போதும்!!!

கற்பனை உலகிற்கே நம்மை
இட்டுச் செல்லும் புத்தகங்கள்
மூளைக்கும் சிறகு முளைக்கும்
மூவுலகும் இட்டுச் செல்லும்!!!

நூலகங்கள் சென்று வர
நாளும் நீ தவறிடாதே
நுண்மதி பெருக்கி வைக்கும்
நூல் கற்க மறந்திடாதே!!!

புதுப்பித்துக் கொள்ள நீயும்
புத்தகம் வாசித்தே பழகு உன்னை
புதுப்பிக்க புதுப்பிக்க
புறந்தள்ளாது இந்த உலகு!!!

வாசிப்பை நாளும் நேசிப்பாய்
நல்ல நூலனைத்துமே சுவாசிப்பாய்
அறிவாளியாக்கும் உன்னை அறிவாய்
அனைவர் மதித்திட நீ உயர்வாய்!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகங்கள்...

திரு ந.ஆரூரன்
முகாமைத்துவ உதவியாளர்,
பிரதேசசபை, பூநகரி.

நல்ல நண்பர்களைப் போல் இடர் மிகுந்த தருணங்களில் நமக்கு தோள் கொடுத்து நிற்பவை நல்ல புத்தகங்கள். புத்தகங்கள் அறிவுப் புதையல்கள், நம் நம்பிக்கை மாளிகையின் கதவுகள் புத்தகங்கள்.

அவை நம்மை சாதிக்கத் தூண்டும் கிரியா ஊக்கிகள். புத்தகங்கள் இல்லாத வாழ்க்கையை என்னால் வாழலே இயலாது என்று கூறி புத்தக வாசிப்பை வாழ்க்கை முறையாகவே பிரகடனப்படுத்தியுள்ளார் பேரறிஞர் தாமஸ் ஜெபர்சன் (Thomas Jefferson)

**உலக வரலாற்றில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ள புத்தகங்கள்.**

மனித குல நாகரித்தை முன்னெடுத்துச் சென்றிருப்பதில் மகத்தான பாத்திரம் புத்தகங்களுக்கும் உண்டு. காட்டுமிராண்டிகளின் கூடாரமாக காட்சி அளித்த சீனாவில் அறிவுப் புரட்சிக்கு வித்திட்டவை 2000 ஆண்டுகளுக்கு முன் கன்ஃபியூசியஸ் எழுதிய புத்தகங்கள்.

13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மார்க்கோ போலோ எழுதிய பயணங்கள் மகத்தான புத்தகம், திரைகடல் ஓடி திரவியம் தேடும் வேட்கையை உலகெங்கும் உருவாக்கியது. அந்தப் புத்தகத்தால் ஈர்க்கப்பட்டு நகைகளும் வாசனைத் திரவியங்களும் மிகுந்த இந்தியாவைத் தேடிப் பயணம் புறப்பட்ட கிறிஸ்தோபர் கொலம்பஸ் புதிய உலகமான அமெரிக்காவைக் கண்டுபிடித்தார்.

சோக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டோட்டில் போன்ற பண்டைக் கால கிரேக்க தத்துவாசிரியர்களின் நூல்களையும் சிஸரோ, செனீக்கா போன்ற பண்டைக்கால லத்தீன் எழுத்தாளர்களின் நூல்களையும் தேடித் தேடிப் படிக்கும் தீவிர ஆர்வம் 14 ஆம் நூற்றாண்டின் போது ஐரோப்பாவில் ஏற்பட்டது. இந்த ஆர்வத்தின் விளைவாகத் தான் ஐரோப்பிய மறுமலர்ச்சி இயக்கமும் அதன் தொடர்ச்சியாக உருவான தொழில் புரட்சியும் ஏற்பட்டது.

இந்திய விடுதலைப் போராட்டத்தின் உந்துசக்தியாக விளங்கிய காந்தியடிகள் தனது வாழ்க்கையையே திருப்பிப் போட்ட புத்தகம் என்று ஜான் ரஸ்கின் எழுதிய “அன்ட்டு திஸ் லாஸ்ட்” (Undo this Last) புத்தகத்தைக் குறிப்பிடுகிறார். ரஸ்கினின் அந்தப் புத்தகத்தை ஒரு பயணத்தின் போது வாசித்த காந்தியடிகள் அன்று இரவு முழுவதும் தூங்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

கடைசி மனிதனும் சிறந்த வாய்ப்புக்களைப் பெற வேண்டும் என்ற உயர்ந்த கோட்பாட்டுக்கு எற்ப எனது வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும் என்று அப் புத்தகத்தை வாசித்த கணமே நான் உறுதி செய்து விட்டேன் என்று அந்த நூல் தனக்குள் ஏற்படுத்திய பாதிப்புக்கள் குறித்து விளக்கும் போது காந்தியடிகள் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

On the Origin of Species – சார்ல்ஸ் டார்வின்

உயிர்களின் பரிணாம வளர்ச்சியை பற்றி அன்றைய மூடத்தனமான கோட்பாடுகளை உடைத்தெறிந்த புத்தகம்.

The Interpretation of Dreams – சிக்மண்ட் பிராய்ட்

உளவியலின் பல உண்மைகளை வெளியிட்ட பிராய்ட் எழுதிய புத்தகம்.

Das Capital (மூலதனம்) கார்ல் மார்க்ஸ்

கம்யூனிஷத்தின் பைபிள் என்றழைக்கப்படும் புத்தகம்.

இவ்வாறு உலகின் எல்லாப் பகுதிகளிலும் வரலாற்றின் திசைப் போக்கை நிர்ணயித் திருப்பதும் வரலாற்று நாயகர்களின் வாழ்க்கையை மேம்பட பெறும் பங்கு வகுத் துறுப்பதும் நல்ல புத்தகங்களே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரைக் குடிக்கும் போதைப் பொருள்...

ச.சீராளன்
பூநகரி.

இன்றைய உலகிலே நாம் 21ம் நூற்றாண்டில் வாழ்ந்து வருகின்றோம். அதன் அடிப் படையில் "அரிது அரிது மானிடனாய் பிறத்தல் அரிது" என்று ஔவைப் பிராட்டியார் கூறிவிட்டுச் சென்றிருக்கின்றார். தற்காலத்தில் அவ் மனிதப் பிறப்பிற்கு போதைப் பொருட் களால் அச்சுறுத்தல் இருப்பது எம் கண்முன்னே காணக்கூடியதாக இருக்கின்றது. அந்த வகையில் மது எனும் அரக்கனும் அவனது கூட்டத்தினரும் எம் மக்கள் மீதும் எமது இளைய சமுதாயத்தினர் மீதும் தனது ஆதிக்கத்தைச் செலுத்திக் கொண்டே இருக்கின் றான். அதன் அடிப்படையில் போதைப் பொருட்கள் தனிமனித வாழ்விற்கும் உலக ஆரோக்கிய வளர்ச்சிகளும் கேடு விளைவிக்கின்றன.

நவீன விஞ்ஞான வளர்ச்சியுடைய இன்றைய வேளையினிலே இன்றைய தலைமுறையினர் மது அருந்துதலையும் புகைத்தலையும் ஒரு நவநாகரிகமாக எண்ணி அதற்கு அடி பணிகின்றனர் என்று கூறுவது வியக்கத்தக்க விடயமாகக் காணப்படுகின் றது. போதைப் பொருட்களை ஒருவன் பாவிப்பதனால் ஒருவகை போதை உணர் வையும் தற்காலிகமான இன்பத்தையும் கிளர்ச்சியையும் உண்டு பண்ணுவதை மாத் திரம் தான் நாம் காணமுடியும். இப் பழக்கமானது தொடர்ந்து தன் ஆதிக்கத்தைப் படிப் படியாக உடலினுள் செலுத்தத் தொடங்கும் போது அவன் பல்வேறு கொடிய நோய்களுக் கு ஆளாவதுடன் அகால மரணங்களும் ஏற்படுகின்றன.

இன்றைய சமதாயத்தை எடுத்து நோக்குவோமானால் இன்றை மக்களும் இளைய சமுதாயத்தினரும் தங்களது உல்லாசமான வாழ்கைக்கு போதைப் பொருட்கள் தான் என்னும் மூடத்தனமான கருத்தை திணிக்கின்றார்கள். போதைப் பொருட் கம்பனிகள் தற்காலத்துப் போதைப் பொருட்களை பலவேறு கவர்ச்சிகரமான முறையில் உற்பத்தி செய்து மக்களை ஏமாற்றுகின்றார்கள். இனறைய சமுதாயத்தினர் இதற்கெல்லாம் அடி பணிந்து தவழ்ந்து திரிகின்றனர். புகைத்தலை எடுத்து நோக்குவோமானால் ஒருவர் புகைக்கும் போது 60% வாயுக்கள் வெளியேறுவதுடன் நுரையீரல் புற்றுநோய் ,மார்புப் புற்றுநோய் , மாரடைப்பு, உயர்குருதி அமுக்கம், என்புருக்கி நோய், பக்கவாதம் போன்ற நோய்கள் ஏற்படுவதுடன் வாய் , தொண்டை, களம், சதையி, சறுநீர்பபை, ஈரல் போன்ற உறுப்புக்களும் பாதிப்படைகின்றன. அதனை யெல்லாம் அறிந்தும் கூட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஆண்களுக்கு சமனாக பெண்களும் குடிப்பவர்களாகவும் புகைப்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

பெண்கள் குடிப்பதனாலும் புகைப்பதனாலும் கருச்சிதைவ, குறைமாதப் பிறப்பு, இறந்து பிறக்கும் குழந்தைகள் என்பன அதிகரித்துக் காணப்படுகின்றன. புகைத்தல் என்பது புகைப்பவரை மட்டும் அல்ல அவருக்கு அருகில் இருப்பவரையும் சுற்றுப்புறச் சூழலையும் பாதிப்படையச் செய்கின்றது.

இன்றைய மக்களை எடுத்து நோக்கினால் இன்றைய மக்கள் குடிப்பதற்கும் புகைப் பதற்குமாக தம் வருமானத்தில் பெருந் தொகையான பணத்தைச் செலவழித்து தம் செல் வத்தை இழப்பதுடன் தம் ஆரோக்கியத்திற்கும் கேடு விளைவித்து உயிருக்கு உலை வைக்கக் கூடிய நோய்களை இன்றைய உலகில் வாழ்பவர்கள் வயது வேறுபாடு இன்றி வேதனம் இன்றி இலவசமாக வாங்குகின்றார்கள்.

மகாத்மா காந்தியை அவரது பெற்றோர் பட்டப்படிப்பிற்கு அவரை அனுப்பும் போது மது அருந்தாதே, கள் உண்ணாதே, பொய் சொல்லாதே என்று கூறி வழி அனுப்பினர். அதே போன்று அன்றைய மாணவர்களுக்கும் இன்றைய இளைய தலைமுறையினருக் கும் இன்றைய சமுதாயத்தினருக்கும் சுகாதாரத் துறையினர் மட்டும் அல்லாது ஆசிரியர் களும் சமூக சேவை உத்தியோகத்தர்களும் போதைப் பொருட்களை உடலினுள் உட் செலுத்துவதனால் ஏறபடும் விளைவுகளை விளிப்புணர்வு மூலமும் கருத்தரங்கு மூலமும் அனைவருக்கும் நல்ல போதிய அறிவினை ஊட்டுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகம்...

ச.சங்கவி
பூநகரி.

அகம் புதிதாக்க உதவுவதும் புத்தகம்
அகிலம் அறிந்திட உதவவதும் புத்தகம்
அறிஞர்களை அறிந்திட துயைபுரிவதும் புத்தகம்
அறிஞராக உயர்ந்திட வித்திடுவதும் புத்தகம்

ஆற்றல் பொருகிட காரணமும் புத்தகம்
அறிவு வளர்ந்திட காரணமும் புத்தகம்
இல்லம் நிறைந்திட தேவை புத்தகம்
உள்ளம் புத்துணர்வு பெற வைப்பதுவும் புத்தகம்

எடுத்த செயல்களை மடித்திட உதவுவதும் புத்தகம்
ஏணியாய் எம்மை உயர்த்துவதும் புத்தகம்
மனிதனை மனிதனாக வாழ வைப்பதுவும் புத்தகம்
மகத்தான மண்ணில் உள்ள சொர்க்கமும் புத்தகம்

மனிதனில் மாற்றங்களை ஊட்டி விடுவது புத்தகம்
மனங்களைக் கொள்ளை பறிப்பதுவும் புத்தகம்
கொடிய கோபத்தைத் தணிப்பதுவும் புத்தகம்
கொள்கைகளை அறிந்திட வழி சமைப்பதுவும் புத்தகம்

இலக்கிய இரசனையை வளர்ப்பதுவும் பனுவல்
இலக்கிய தாகம் தணிப்பதுவும் புத்தகம்
விஞ்ஞான வளர்ச்சிக்கு காரணமும் பனுவல்
விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏணியும் புத்தகம்

நேர்முகத் தேர்வில் தேர்வாகக் காரணமும் புத்தகம்
நேரில் பார்ககாதவரையும் நேசிக்க வைக்குமாம் பனுவல்
மனக்கவலைகளை நீக்கும் மருத்துவமும் புத்தகம்
மனக் குறைபை போக்கும் காரணியும் பனுவலே

மானிடனின் மகச் சிறந்த கண்டுபிடிப்பும் புத்தகம்
மானிடனைக் கண்டு பிடித்துத் தந்ததுவும் நூல்
குற்றவாளியைத் தீருத்திடுமாம் பனுவல்
குற்றங்களைக் களைந்து விடுவதும் புத்தகம்

நேரத்தைப் பொன்னானதாக உருவாக்குவதும் பனுவல்
நேர நிர்வாகம் கற்பிப்பதுவும் புத்தகம்
புத்தரைப் புரிய வைத்திடுமாம் இனியநூல்
சித்தரைச் சிந்திக்க வைத்திடுமாம் சிந்தனைப பொக்கிஸம்

பெரியாரின் சிந்தனையை உன்னதமாய் உணர்த்துவதும் பனுவல்
பெரியோரை மதிக்க வைப்பதுவும் அரிய புத்தகம்
சோதனைகளை சாதனைகள் ஆக்குவதும் சாதனை நூல்
வேதனைகளை நீக்கி விவேகம் தருவதும் புத்தகம்

வாசியுங்கள் தினமும்தனித்துவம் மிக்க புத்தகத்தை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அபிவிருத்தியில் சனசமூக நிலையங்களுக்குள்ள பங்கு
# Role of Community Centers for Village Development

அ.சசிகுமார் – B.A(Hons), PGDE.
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
கிளிநொச்சி.

## கிராம அபிவிருத்தி

ஒரு கிராமத்தினுடைய அபிவிருத்தி என்பது அக்கிராமத்தில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்படுகின்ற ஒரு பண்பு ரீதியான முன்னேற்றமாகும். உற்பத்தி, வருமானம் என்பவற்றின் அதிகரிப்புடன் வறுமை குறைவடைதல், வேலையின்மை குறைவடைதல், வருமான ஏற்றத்தாழ்வுகள் குறைவடைதல் என்பவற்றுடன் கல்வி, சுகாதார மருத்துவ வசதிகள், எல்லோருக்கும் வீடு, தனிமனித சுதந்திரம் போன்ற சமூகநல மானிட விருத்தியுடன் ஏற்படுகின்ற ஒரு முன்னேற்றத்தையே கருதுகின்றது.

உலக வங்கியின் கருத்துப்படி கிராமிய அபிவிருத்தி என்பது "குறைவான வருமான மட்டத்தில் வாழ்கின்ற கிராம மக்களின் உற்பத்தித்திறன் வருமான மட்டம் என்பனவற்றில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் வறுமையிலிருந்து கிராம மக்களை விடுவிப்பது தொடர்பான ஒரு செயன்முறையே" கிராமிய அபிவிருத்தி எனப்பட்டது.

ஒவ்வொரு கிராமங்களும் அபிவிருத்தி அடைவதன் மூலமே பிரதேச, நகர, மாவட்ட, மாகாண, தேசிய அபிவிருத்திகள் ஏற்பட முடியும். ஒரு நாட்டில் நீண்டகால பொருளாதார வளர்ச்சி, நிலைபேறான அபிவிருத்தி என்பன ஏற்படவேண்டுமாயின் கீழ் மட்டத்தில் உள்ள ஒவ்வொரு கிராமங்களும் வளர்ச்சியடைதல் அவசியமாகும்.

இதனாலேயே தேசிய அரசாங்கம் பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கும் போது கிராம மட்டங்களிலிருந்து அபிவிருத்தி ஏற்படும் வகையில் கொள்கைகளை வகுப்பதையும் வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதையும் தற்காலங்களில் அவதானிக்க முடியும்.

## கிராம அபிவிருத்திக்கு அவசியமான உட்கட்டுமானங்கள்

இத்தகைய கிராமிய அபிவிருத்திகள் ஏற்படவேண்டுமாயின் அக்கிராமத்தின் பொருளாதார, சமூக உட்கட்டுமானங்கள் விருத்தியடைதல் அவசியமாகும். வீதிகள், பாலங்கள், மின்சார வசதிகள், தொலைத்தொடர்பு வசதிகள், சிறுகைத்தொழிற்சாலைகள, பாடசாலை, முன்பள்ளி, சுகாதார நிலையம், சனசமூக நிலையம், விளையாட்டு மைதானம், பொதுநோக்கு மண்டபம், கலாச்சார மண்டபம், சமய வழிபாட்டுத் தலங்கள் போன்ற கட்டுமானங்கள் கிராமிய அபிவிருத்திக்கு அவசியமான உட்கட்டுமானங்கள் ஆகும்.

ஒவ்வொரு கிராமத்திலும் இத்தகைய கட்டுமானங்கள் விருத்தியடையும்போதே மக்களின் பொருளாதார, சமூக, கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்கள் விருத்தி அடைந்து எல்லா மக்களதும் வாழ்க்கைத்தரத்தில் ஒரு முன்னேற்றம் ஏற்படும். அதுவே கிராமிய அபிவிருத்தியாகவும் கொள்ளப்படும்.

## கிராம அபிவிருத்திக்கு சமூகமட்ட அமைப்புக்களின் அவசியம்

ஏதேனும் குறிப்பிட்ட இடப்பரப்பினையோ அல்லது பொருளாதார, சமூக, கலாசார, சமய மற்றும் தொழில் ரீதியாக அல்லது இவற்றில் எதனை அடிப்படையாகக் கொண்டோ ஒரு குழுவாக ஒன்று சேர்ந்து வாழுகின்ற மானிடத் தொகுதியே சமூகம் எனப்படும். இத்தகைய சமூகத்தை பிரதிபலிக்கின்ற அமைப்புக்களே சமூக மட்ட அமைப்புக்கள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமிய உட்கட்டுமானங்களை விருத்தி செய்வதற்கு பெருந்தொகை நிதி தேவைப் படும். இதனால் உடனடியாகவோ அல்லது முழுமையாகவோ அரசாங்கத்தினாலோ அரச சார்பற்ற நிறுவனங்களினாலோ வேறு நன்கொடையாளர்களாலோ இவற்றை பூர்த்தியாக்க முடியாது. வரையறுக்கப்பட்ட நிதி வளங்களை சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், நிறுவனங்கள் பகிர்ந்தளிக்கின்றபோது தமது கிராமத் தேவைகளை முன்னுரிமைப்படுத்தி நிதி ஒதுக்கீடுகளை தமது கிராமத்திற்கு எடுத்துச் செல்வதும் மக்களது பங்கேற்புடன் அவற்றை செயற்திறனாக நிறைவேற்றுவதும் அப்பகுதி கிராம மட்ட அமைப்புக்களையே சாரும்.

**"சமூக மூலதனம்"** என அழைக்கப்படுகின்ற சமூகமட்ட அமைப்புக்கள் ஒவ்வொரு கிராமங்களிலும் பலமாக இருத்தல் கிராமிய அபிவிருத்திக்கு இன்றியமையாத ஒன்றாகும். சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், கமக்கார அமைப்பு, மீனவர் சங்கம் போன்ற அமைப்புக்கள் எந்தக் கிராமத்தில் பலமானவையாகவும், மக்களை ஒன்றுதிரட்டும் சக்தியாகவும் செயற்படுகின்றனவோ அந்தக்கிராமங்களே அதிகம் வளர்ச்சியடைந்திருப்பதை அல்லது வளர்ச்சியடைந்து வருவதை யாரும் அவதானிக்க முடியும்.

இவ்வகையில் ஒரு கிராமத்தினுடைய வளர்ச்சிக்கு சனசமூக நிலையமொன்று கிராமமட்ட சமூக அமைப்பு என்றவகையில் அரிய பணிகளை அற்பணிப்புடன் ஆற்ற வேண்டியுள்ளது.

## சனசமூக நிலையம் (Community Center)

சமூகம் ஒன்று தமது பொருளாதார, சமூக, கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக கருத்துக்களை பரிமாறி செயற்படுவதற்காக ஒன்று கூடுகின்ற ஓர் இடம் சன சமூக நிலையம் என குறிப்பிடமுடியும். அதாவது ஒன்று கூடுதல், உணர்வுகளை பகிர்தல், அறிதல், அறிவுத் தேடல், விளையாடுதல் என சமூகத் தேவைகள் பலவற்றை பூர்த்தி செய்வதற்காக நிறுவப்படும் ஒரு சமூக நிறுவனமே சனசமூக நிலையம் ஆகும்.

சனசமூக நிலையங்கள் இலாப நோக்கமற்ற, சமய / சாதி சார்பற்ற, அரசியல் கட்சி சார்பற்ற, சமூக சேவையை முன்னிறுத்தும் உள்ளூர் மயப்பட்ட நிறுவனங்கள் ஆகும். இவற்றை ஏனைய சமூகமட்ட அமைப்புகளில் இருந்து வேறுபடுத்திப் பார்க்கலாம்.

## சனசமூக நிலையம் ஒன்றின் நோக்கம்

சனசமூக நிலையமொன்றின் நோக்கம் சனசமூக நிலையப் பிரதேசத்திலுள்ள மக்கள் அனைவரும் தமது ஓய்வு நேரங்களை பயனுள்ள வகையில் செலவிடுவதற்கு வசதிகள் அளித்தல் ஆகும்.

நிருவாகப் பிரதேசத்திலுள்ள கிராம மக்களின் பொருளாதாரம், சமூகம், சமயம், கலை, கலாச்சாரம், பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் விளையாட்டுத் துறையில் அபிவிருத்தியை ஏற்படுத்தலும் மக்களின் ஓய்வு நேரத்தை நலமுடன் கழிப்பதற்கு ஏற்ற முறையில் திட்டமிட்டுச் செயற்படுதலும் அதற்காக அரச, அரசசார்பற்ற நிறுவனங் களின் உதவிகளைப் பெற்று பயன்படுத்தலும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

## சனசமூக நிலையத்தின் பொருளாதாரப் பணிகள்

தமது கிராமத்திலுள்ள மக்களின் வாழ்வாதாரங்களை முன்னேற்றுதற்கான செயற் பாடுகளில் சனசமூக நிலையங்கள் ஈடுபட வேண்டும்.

- கிராமத்தின் இளைஞர்கள் மற்றும் யுவதிகளுக்கான தொழிற்பயிற்சியும் வேலை வாய்ப்புக்களையும் உருவாக்கல் (மேசன் வேலை, மரவேலை, தும்புத்தொழில் ...)
- விவசாயம், மீன்பிடி, விலங்கு வேளாண்மை முயற்சிகளைத் தூண்டுதலும் அவை பற்றி அறிவூட்டலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குடிசைக் கைத்தொழிலுக்கு வழிகாட்டுதல் (முறுக்கு, மிக்சஉ தயாரித்தல், பொதியிடல் சந்தைப்படுத்தல்)
- பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு தொழில் வழி காட்டலை செய்தலும், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து நிதி மூலதனத்தை பெற்றுக் கொடுத்தலும்.
- வறிய குடும்பங்களுக்கு தொழில்முயற்சிக்காக நுண்கடன் வசதிகளை ஏற்படுத்தல்
- அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஒப்பந்த அடிப்படையில் பெற்று மேற்கொள்வதன் மூலம் கிராமத்திலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தல்.

**சனசமூக நிலையத்தின் கல்விப் பணிகள்**

மக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்துவதனூடாக கிராமத்தின் அறிவுத்திறனை வளர்க்க சனசமூக நிலையங்கள் உதவவேண்டும். மக்களுக்கு நெருக்கமான அமைப்பாக இருப்பதுடன் பத்திரிகைகள் சஞ்சிகைகள் என்பவற்றினை மக்களிற்கு எளிதில் கிடைக்கச் செய்வதனூடாக மக்களின் வாசிப்புப் பழக்கத்தினை அதிகரித்து மக்களின் அறிவுத்திறனை விருத்தி செய்ய முடியும்.

பின்வரும் செயற்பாடுகளினூடாக சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கு சனசமூக நிலையங்கள் உதவ முடியும்.

- வாசிகசாலை நடாத்துதல்
- பாலர் பாடசாலை
- வயோதிபக் கல்வி
- பாடசாலைகளின் பின் மாலை நேரக்கல்வி
- பேச்சுப் போட்டி
- கட்டுரைப் போட்டி
- ஓவியப் போட்டி
- பாட்டுப் போட்டி
- 5ம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சை, க.பொ.த.சாதாரணதர, க.பொ.த.உயர்தர பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவித்தல்.
- கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்கு செய்தல்
- பாடசாலை செல்லாத மாணவஉகளை இனங்கண்டு பாடசாலைக்கு அனுப்புதல் பொதுமக்கள் அவசியமான சட்ட திட்டங்களை அறிந்து கொள்ள விழிப்புணர்வூட்டல்.

**சனசமூக நிலையத்தின் சுகாதார, நலப் பணிகள்**

- டெங்கு நோய்த் தடுப்பு நடவடிக்கை.
- பிரதேச சுத்தம் சம்மந்தமான சிரமதான வேலைகள்.
- இலவச சிகிச்சை முகாம்கள் அமைத்தல்.
- முதலுதவிப் பயிற்சி வழங்கல்.
- மாற்று வலுவுள்ளோர்களுக்கு உதவுதல்.
- கண் தானம் செய்தல்.
- இரத்த தானம் செய்தல்.

**சனசமூக நிலையங்கள் கலை, கலாச்சாரங்களை பாதுகாத்தலும் வளர்த்தலும்**

- தமது பிரதேசங்களிலுள்ள கோவில் திருவிழாக்களை நடாத்துதல்,
- தைப்பொங்கல், நவராத்திரி, ஒளி விழா போன்ற நிகழ்வுகளை நடாத்துதல்.
- இலக்கிய விழாக்களை ஒழுங்குபடுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இயல் இசை நாடகம் மற்றும் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல்
- பட்டி மன்றம் நடாத்துதல்
- பாரம்பரிய கலை நிகழ்வுகளை நடாத்துதல் (கூத்துக்கள், இசை நாடகங்கள்)
- கிராமியக் கலைஞர்களை கௌரவித்தல்.

## சனசமூக நிலையங்கள் ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்பும் அமைப்பு

- சமூகமட்டத்தில் தலைவர்களை உருவாக்கக்கூடிய அடித்தளத்தை சனசமூக நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும். தலைமைதாங்கும் பண்பு, பேச்சாற்றல், எழுத்தாற்றல் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக செயற்படல், நடுநிலைமை, எடுத்த பணியை நிறைவேற்றல் என பல்வேறு வகையான தலைமைத்துவப் பண்புகளை வளர்க்க மக்களுக்கு சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுக்கும் அமைப்பாக சனசமூக நிலையங்கள் விளங்கவேண்டும்.
- இளைஞர்கள் யுவதிகளின் மன அமைதியின்மைக்கான காரணங்களை இனங் கண்டு அவை தொடர்பான அறிவு பூர்வமான கருத்தரங்குகளை நடாத்தி வழிகாட்டுதல் வேண்டும்.
- நல்லொழுக்கப் பண்புகளை அபிவிருத்தி செய்தல்.
- மதுப்பாவனை, கஞ்சாப் பழக்கம், கொலை, கொள்ளை, பாலியல் துஸ்பிரயோகம் போன்றவற்றால் ஏற்படும் சமூக சீர்கேடுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை நடாத்துவதன் மூலமும் சமூக வேலைத்திட்டங்களில் இளையோரை இணைப்பதன்மூலமும் இளைய சமுதாயத்தை சமூக சிந்தனையுள்ளவர் களாக மாற்றி ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க சனசமூக நிலையங்கள் வழிகாட்ட வேண்டும்.

## சனசமூக நிலையங்கள் உள்ளூராட்சி மன்றத்தின் (பிரதேச சபையின்) அபிவிருத்திச் செயற்பாடுகளில் இணைந்து செயலாற்றுதல்

உள்ளூராட்சி மன்றங்களையும் (பிரதேச சபை) மக்களையும் தொடர்புபடுத்தும் அமைப்புகளாக சனசமூக நிலையங்கள் விளங்குகின்றன. உள்ளூராட்சி மன்றங் களினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் சனசமூக நிலையங்கள் பல்வேறு வழிகளில் பங்கு பற்றி சமூக அபிவிருத்திக்கு உதவ முன்வரவேண்டும்.

### 1. மக்களின் தேவைகளையும் குறைபாடுகளையும் தெரியப்படுத்தல்

மக்களின் தேவைகள், குறைகளை அடையாளங்கண்டு உள்ளூராட்சி மன்ற குறைகேள் முறைமையினூடாக உள்ளூராட்சி மன்ற தலைமைத்துவத்திற்கு அறியத் தரவேண்டும். இதனால் மக்களிற்கு மிகவும் அவசியமான தேவைகள் எவை என்பதனையும் எப்பிரச்சினை சமூகத்தில் அடிக்கடி ஏற்படுகிறது எப்பிரதேசத்தில் எவ்வகையான பிரச்சினை காணப்படுகிறது என்பதனை உள்ளூராட்சி மன்றங்கள் அறிந்து கொள்ள சனசமூக நிலையங்கள் உதவமுடியும்.

### 2. மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் தயாரிக்க உதவுதல் (LAPDP)

உள்ளூராட்சி மன்றங்கள் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்து அதனடிப்படையில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கின்றன. இதற்காக மக்களின் தேவைகளை அடையாளங்காணவும் அவற்றை முன்னுரிமைப்படுத்தவும் சனசமூக நிலையங்கள் உதவ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. அபிவிருத்திப் பணிகளில் மக்கள் பங்களிப்பினை பெற்றுக் கொடுத்தல்

உள்ளூராட்சி மன்றங்கள் தமது அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்ளும் போது மக்கள் பங்குபற்றலுடனேயே மேற்கொள்ள வேண்டும் என்று உள்ளூராட்சி மறு சீரமைப்பு சுற்றறிக்கை 10ல் கூறப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றங்கள் சமூகத்தின் பங்களிப்பினை பெற்றுக்கொள்ள சனசமூக நிலையங்கள் உதவவேண்டும்.

கிராமங்களில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது வேலைபற்றிய விளக்கங்களை மக்களுக்கு வழங்குவதும் அவர்களை ஒன்றிணைத்து சிரமதானம் மேற்கொள்ளல், சமூக கண்காணிப்பு குழுக்களைத் தெரிவு செய்து வேலைகள் ஒழுங்குமுறையாக நடைபெறுவதை கண்காணித்து அறிக்கையிடல் என்பவற்றினூடாக உள்ளூராட்சி மன்றங்களிற்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் வீதி அகலிப்பு, குடிநீர் விநியோகம் போன்ற செயற்பாடுகளில் தாங்களாகவே முன்வந்து ஒத்துழைப்பு வழங்கும் அளவிற்கு மக்களை நெறிப்படுத்தவேண்டியது சனசமூக நிலையங்களது கடமைகளாகும்.

### 4. பாதீடு (வரவு செலவுத் திட்டம்) தயாரிப்பதற்கு உதவுதல்

உள்ளூராட்சி மன்ற பாதீடு தயாரிப்பு நடவடிக்கைகளிலும் நடைமுறைப்படுத்தலிலும் சனசமூக நிலையங்களின் பங்கு மிகவும் அவசியமானதாகும். வரவு செலவுத் திட்டத்தில் தம்மால் முன்வைக்கப்பட்ட அவசிய தேவைகள், பிரச்சினைகளுக்கு நிதி ஒதுக்கப் பட்டுள்ளதா? எல்லா கிராமங்களுக்கும் நிதி ஒதுக்கீடு பரவலாக்கப்பட்டுள்ளதா? பிரதேச சபை குறித்த வருடத்தில் என்னென்ன வேலைத் திட்டங்களை ஆற்றவுள்ளது? போன்ற பல விடயங்களையும் அறியவும் நியாயப்படுத்துவதன் மூலம் முன்னுரிமைத் தெரிவுகளில் மாற்றங்களைச் செய்து கொள்ளவும் மக்களுக்கும் பிரதேச சபைக்கும் உள்ள இடை வெளிகளைக் குறைப்பதற்கும் இது உதவும்.

### 5. வரி அறவீடு, மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கு உதவுதல்

மக்களிடமிருந்து சோலைவரி மற்றும் வரி நிலுவைகளை உள்ளூராட்சி மன்றங் களிற்கு பெற்றுக் கொடுக்க சனசமூக நிலையங்கள் உதவவேண்டும். கட்டட அனுமதி பெறுவதன் அவசியத்தை மக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதுடன் அனுமதியற்ற வகையில் கட்டப்படும் கட்டடங்கள் தொடர்பில் உடனடியாக உள்ளூராட்சி மன்றத்திற்கு தெரியப்படுத்துவதும் சனசமூக நிலையங்களுக்குள்ள கடமையாகும்.

சனசமூக நிலையங்கள் கிராம மட்ட அமைப்பு என்றவகையில் ஏனைய அமைப்புக் களிலிருந்து வேறுபட்டு பல பணிகளை ஆற்றுவதன் மூலம் கிராமிய உட்கட்டுமானங் களை விருத்திசெய்து அப்பகுதி மக்களின் வாழ்க்கைத்தரத்தில் ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும். எனினும் தற்போதைய சூழலில் இயங்கிவரும் சனசமூக நிலையங் கள் தமது உண்மையான நோக்கத்தையும், ஆற்றவேண்டிய பணிகளையும் அறிந்து சமூகப்பணி ஆற்றுகின்றனவா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தத்தால் தமது வாழ்வாதாரங்களை இழந்த மக்களால் சமூக பணிகளை முழுமையாக ஆற்றுவதில் சவால்கள் இருந்திருப்பினும் இனிவரும் காலங்களில் சனசமூக நிலையங்கள் தமது நோக்கத்திற்கு ஏற்றவாறு பணிகளை ஆற்றி செயற்படுவதுடன் யுத்தத்தால் அழிவடைந்த கிராமங்களை எழுச்சிபெறச் செய்வதற்கு தமக்குள்ள பங்கினையும் புரிந்து செயற்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க புத்தகங்கள்
## வளர்க வாசிப்புக் கலை...

திருமதி ந.மேதினி
யாழ் பல்கலைக்கழகம்

வாசிக்க மறந்தது ஏனோ ? அறிவு வளர ஆற்றல் மிளிர அற்புத நூல்கள் படிப்போம் ! கற்றது கைம்மண் அளவு, கல்லாதது உலகளவு என்பது பழமொழி. இன்றைய காலக் கட்டத்தில் அறிவை வளர்ப்பதற்கு யாரும் படிப்பதில்லை. அரச வேலை, கை நிறைய சம்பளத்துடன் ஒரு வேலை என்ற எண்ணத்துடனேயே படிக்கின்றனர். அரசு வேலைக்கு சென்று விட்ட பின் புத்தகத்தை புரட்டிப் பார்ப்பதேயில்லை. இதற்கு பாடம் போதிக்கும் ஆசிரியைகளும் விதிவிலக்கின்றி இருப்பது தான் வேதனையான விடயம். படிக்கும் காலத்தில் உயர் கல்வியில் தேர்ச்சி பெற்று விட்டால் மாணவர்கள் தமக்கும் புத்தகத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை எனக் கருதி விடுகின்றனர். இது மிகப் பெரிய தவறு ஆகும். கல்வி என்பது அழியாத செல்வம். கல்வி கற்க வயது ஒரு தடையல்ல. வாழ்நாள் முழுதும் கற்றுக் கொண்டே இருக்கலாம். இதனையே வள்ளுவரும் "தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத்தூறும் அறிவு" என்கிறார்.

ஆளும் வளரணும், அறிவும் வளரணும் அதுதான் வளர்ச்சி. ஒரு வேலை செய்ய வேண்டும் என்றால் அதற்கு சக்தி தேவை. அந்த வேலையை வெற்றிகரமாக செய்ய வேண்டும் என்றால் அறிவு தேவை. அறிவு வளர அன்றாடம் நல்ல புத்தகங்களை வாசிக்க வேண்டும். ஒரு மனிதன் ஆண்டுக்கு இரண்டாயிரம் பக்கங்களை படித்தால் தான் உலக விவகாரங்களை ஓரளவுக்கு அறிந்தவனாக (Informative man) கருதப் படுவதாக யுனெஸ்கோ கூறியுள்ளது. விஞ்ஞான உலகில் இன்று மாணவர்களிடமும் மக்களிடமும் வாசிக்கும் பழக்கம் குறைந்துள்ளது. செய்தித் தாள்களை கூட தலைப்புப் பக்கத்தை மட்டுமே பார்க்கின்றனர். நேரமில்லை என்பதை காரணமாகக் கூறுகின் றனர். நேரத்தை திட்டமிட்டு நாள்தோறும் நூல்களைப் படிக்க வேண்டும். அறிவை விதைக்கும் களமாக பாடசாலையும் அறிவை செம்மைப்படுத்தும் களமாக நூலகமும் விளங்குகின்றன.

நகமும் சதையும் போன்று இணை பிரியாதது நூலகமும் பாடசாலையும். நூலகம் என்றவுடன் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான எண்ணங்கள் மனதில் அலைபாயும். அமைதியான சூழல், நூல்களின் ஒழுங்கான வரிசையமைப்பு, பழைய புதிய நூல்கள், நேரம் கடந்தது தெரியாமல் ஆழ்ந்த படிப்பில் மூழ்குவது என பலவித எண்ணங்கள் தோன்றும்.

நூலகம் புத்தகசாலை, வாசிகசாலை, படிப்பகம், சுவடிச்சாலை, சுவடியகம், ஏடகம், நூல் நிலையம் என பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. நூலகம் என்ற தமிழ் சொல் லுக்கு நிகரான ஆங்கிலச் சொல் Library (லைப்ரரி) ஆகும். லத்தீன் மொழியில் லிப்ரா என அழைக்கப்படுகின்றது. ஆறில்லா ஊர் அழகுக்கு பாழ் என்பது பழமொழி. நூலகமில் லா ஊருக்கு அறிவு பாழ் என்பது புதுமொழி. ஒரு அரசின் தலையாய கடமை மக்களை அறிவுடையோராக்குதல் ஆகும். அதற்கிணங்க ஊர் தோறும் மக்கள் தொகைக்கு ஏற்ப நூலகங்களை உருவாக்கி தேவையான நூல்களை வழங்க வேண்டும். மாணவர் பருவம் என்பது கற்றலுக்கு உகந்தது. இந்த பருவத்தில் பல துறைகளை பற்றி அறிந்து கொள்ள வேண்டும. இதற்கு துணை நிற்பது நூலகமே. நூலகத்தில் மருத்துவம்திறனாய் வு, அறிவியல், கணிதம், வணிகம் போன்ற எண்ணற்ற நூல்கள் இடம்பெற்றுள்ளன.

நூலகங்களைப் பாதுகாப்போம்.
அறிவுப்பசி நீங்க வாசிப்போம் வாங்க!
வாசிப்பின் மூலம்
நம் சிந்தனை மேலோங்கும்!
நம் சொல் திறன் வளரும்!
நாம் எந்த தலைப்பிலும் பேசத் தயாராவோம்
மன அழுத்தத்தைக் குறைக்கும்
கற்பனை வளம் அதிகரிக்கும்
தனிமையைத் தகர்த்து விடும். இப்படி இன்னும் பல
வாசிக்கும் பழக்கம் வளரட்டும்:

விஜய நரன




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய வாசிப்பு மாதம் ஒக்டோபர் – 2015 நிகழ்வுகளின் பதிவுகள்...















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








இச் சஞ்சிகை பூநகரி பொதுநூலக சமூகத்தினரால் 2016 தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org